# பத்திரிக்கைச் செய்தி

## வேலூர் மாவட்டத்தில் உள்ள வாணியம்பாடியில் கட்டுமானம் மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்கள் வாரியங்களில் பதிவு செய்வதற்கான சிறப்பு முகாம் நடைபெறுதல்

கட்டுமானத் தொழிலாளர்கள், உடலுழைப்புத் தொழிலாளர்கள், ஓட்டுநர்கள், சலவைத் தொழிலாளர்கள், முடிதிருத்துவோர், தையல் கலைஞர்கள், கைவினைத் தொழிலாளர்கள், பனைமரத் தொழிலாளர்கள், காலணி மற்றும் தோல் பொருள் உற்பத்தி செய்யும் தொழிலாளர்கள், ஓவியர்கள், பொற்கொல்லர்கள், மண்பாண்டத் தொழிலாளர்கள், வீட்டுப் பணியாளர்கள், கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெய்யும் தொழிலாளர்கள், விசைத்தறி நெசவாளர்கள், பாதையோர வணிகர்கள் மற்றும் கடைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள், சமையல் தொழிலாளர்கள் உள்ளிட்ட பல்வேறு தொழில் செய்யும் அமைப்புசாரா தொழிலாளர்கள் முறையே கட்டுமானம் மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்வதற்கு ஏதுவாக வேலூர் மாவட்டத்தில், வாணியம்பாடியில் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு வணிகவரி மற்றும் பத்திரப்பதிவு துறை அமைச்சர் அவர்கள், வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்கள், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர் பெருமக்கள் ஆகியோர்கள் முன்னிலையில் 11-03-2017 அன்று இஸ்லாமியா ஆண்கள் கலைக்கல்லூரி வளாகத்தில் காலை 08.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை சிறப்பு முகாம் நடைபெற உள்ளது.

மேற்கண்ட முகாமில் பதிவு செய்யும் அமைப்புசாரா தொழிலாளர்கள் 18 வயது முதல் 60 வயது வரை உள்ளவராக இருக்க வேண்டும். பதிவு செய்வதற்கு பதிவு விண்ணப்பத்துடன் குடும்ப அட்டை, ஆதார் அட்டை, ஓட்டுநர் உரிமம் (ஓட்டுநர்கள் நல வாரியத்திற்கு மட்டும்), வங்கி கணக்கு புத்தகம், புகைப்படம்-2 மற்றும் பணிச்சான்று ஆகிய ஆவணங்கள் இணைக்கப்பட வேண்டும்.

கட்டுமானம் மற்றும் அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு பெற்ற தொழிலாளர்களுக்கு கல்வி, திருமணம், மகப்பேறு, கண்கண்ணாடி, ஓய்வூதியம், விபத்து மரணம் / விபத்து ஊனம், இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு போன்றவற்றிற்கு உதவித்தொகைகள் வழங்கப்பட்டு வருகிறது.

கட்டுமானம் மற்றும் அமைப்புசாரா தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்கள் இம்முகாமில் கலந்து கொண்டு உறுப்பினராக பதிவு செய்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

7/3/17

தொழிலாளர் அலுவலர்,
(சமூக பாதுகாப்பு திட்டம்),
வேலூர்.

8/3/17
செ.ம.தொ.அ.
வேலூர்- 9.